இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு

(காப்புறுதித்துறை ஒழுங்குபடுத்துனர்)

INSURANCE REGULATORY COMMISSION OF SRI LANKA

# பொது மக்களுக்கான முக்கிய அறிவித்தல்

# கைத்தொலைபேசி ஊடான காப்புறுதி

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, காப்புறுதி பெறவுள்ள மக்களையும், காப்புறுதிப் பூட்கையாளர்களையும் அல்லது ஆர்வமுள்ள பொது மக்களையும் **கைத்தொலைபேசி/நிலையான இணைப்பு வலையமைப்பு தொழிற்படுத்துனர்கள் ஊடாக விற்பனை செய்யப்படும் காப்புறுதிப் பூட்கைகள் தொடர்பான** அவர்களுடைய முறைப்பாடுகள் அல்லது கருத்துக்களை மற்றும் ஏனைய தகவல்களைச் சமர்ப்பிக்குமாறு கோருகின்றது.

ஆர்வமுள்ள தரப்பினர் அவர்களுடைய முறைப்பாடுகள்/கருத்துகள்/தொடர்புடைய தகவல்களை எழுத்து மூலம் அவர்களுடைய தொடர்பு கொள்ளல் விபரங்களுடன் **"தலைவர், கைத்தொலைபேசி காப்புறுதி மீதான உப குழு"** விற்கு **14 ஒக்டோபர் 2020 அன்று அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கக்கூடிய வகையில் கீழ்வரும் தொடர்புகொள்ளல் முகவரிக்கு பதிவுத் தபால்/மின்னஞ்சல்/பக்ஸ் மூலல் அனுப்பி வைக்க முடியும்.

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, இலங்கையில் காப்புறுதிப் பூட்கையாளர்களினதும் உத்தேச காப்புறுதிப் பூட்கையாளர்களினதும் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் காப்புறுதிக் கைத்தொழிற்துறையை அபிவிருத்தி செய்வதற்கும், மேற்பார்வையை மேற்கொள்வதற்கும் மற்றும் ஒழுங்குபடுத்தவதற்காகவும் 2000 ஆம் ஆண்டு 43 ஆம் இலக்க காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நிறுவப்பட்டுள்ளது.

*மேற்குறித்த விடயம் தொடர்பாக ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் அவசியமாயின் சந்தை அபிவிருத்தி மற்றும் வெளிவிவகார உறவுகள் அலகில் பெற்றுக்கொள்ள முடியும்.*

தலைவர்
கைத்தொலைபேசி காப்புறுதி மீதான உப குழு
**இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு**
11ம் மாடி, கிழக்குக் கோபுரம், உலக வர்த்தக மையம், கொழும்பு 01.
தொலைபேசி:: (011) 2396184-9 பக்ஸ்:: (011) 2396190
மின்னஞ்சல்: mosubcommittee@ircsl.gov.lk வெப்தளம்: www.ircsl.gov.lk